

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் கழகத்தின் மகத்தான வெற்றியை, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம், சென்னை – அண்ணா அறிவாலயத்தில் கழக முன்னோடிகள், தோழர்களுக்கு இனிப்பு வழங்கிக் கொண்டாடி மகிழ்ந்த காட்சி! கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் எ.வ.வேலு, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

### 7 மாநிலங்களில் இடைத்தேர்தல்:

# பா.ஜ.க.வுக்கு பெரும் பின்னடைவு!

## 13 தொகுதிகளில், ‘இந்தியா’ கூட்டணி 11 தொகுதிகளை கைப்பற்றியது!

சென்னை, ஜுலை 15 –

தமிழ்நாடு, மேற்குவங்கம் உள்ளிட்ட 7 மாநிலங்களில் 13 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கையில் 11 தொகுதிகளில் இந்தியா கூட்டணிக் கட்சிகள் முன்னிலை பெற்றுள்ளன.

அண்மையில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் கருத்துக்கணிப்புகளை எல்லாம் பொய்யாக்கும் வகையில் அதிகபட்ச இடங்களில் இந்தியா கூட்டணி வெற்றி பெற்றது.

இந்நிலையில், கடந்த 10ம் தேதி தமிழ்நாட்டில் விக்கிரவாண்டி, மேற்குவங்கத்தில் உள்ள ராய்கஞ்ச், ரனாகாட் தக்சின், பாக்தா மற்றும் மணிக்தலா ஆகிய 4 தொகுதிகள், மத்தியப் பிரதேசத்தில் அமர்வாரா, பீகாரில் ரூபாலி, உத்தரகாண்டில் உள்ள பத்ரிநாத் மற்றும் மங்களூர், பஞ்சாப்பில் ஜலந்தர் மேற்கு, இமாச்சலப் பிரதேசத்தில் டேஹ்ரா, ஹமிர்பூர் மற்றும் நலகர் ஆகிய 13 தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்த தொகுதிகளில் பதிவான வாக்குகள் எண்ணும் பணிகள் நேற்று காலை 8 மணிக்கு தொடங்கி நடைபெற்று வருகின்றன. மேற்குவங்கத்தில் ஏற்கனவே பா.ஜ.க.வசம் இருந்த ராய்கஞ்ச், ரனாகாட் தக்சின் ஆகிய 2 தொகுதிகள் உள்ளிட்ட 4 தொகுதிகளிலும் திரிணாமுல் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ளது. இமாச்சலப் பிரதேசத்தில் 3 தொகுதிகளிலும் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ளது. உத்தரகாண்ட் மாநிலத்தில் ஒருதொகுதியில்பா.ஜ.க.வும், ஒரு தொகுதியில் காங்கிரசும் முன்னிலை பெற்றுள்ளன.

பஞ்சாப் மாநிலம் ஜலந்தர் மேற்கு தொகுதியில் ஆம் ஆத்மி வேட்பாளர் மொஹிந்தர் பகத் வெற்றி பெற்றுள்ளார். பீகாரில் உள்ள ஒரு தொகுதியில் ஐக்கிய ஜனதா தளமும், மத்தியப் பிரதே சத்தில் உள்ள ஒரு தொகுதியில் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் விக்கிர வாண்டி தொகுதியில் தி.மு.க. அமோக வெற்றி பெற்றது.

மேற்குவங்கத்தில், ஏற்கனவே பா.ஜ.க.வசம் இருந்த ராய்கஞ்ச், ரனாகாட் தக்சின் ஆகிய 2 தொகுதிகள் உள்ளிட்ட 4 தொகுதிகளிலும் திரிணாமுல் காங்கிரஸ் முன்னிலை பெற்றிருந்தது.

இமாச்சலப் பிரதேசத்தில் 3 தொகுதிகளிலும் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ளது.

உத்தரகாண்டில் ஒரு தொகுதியில் பா.ஜ.க.வும், ஒரு தொகுதியில் காங்கிரசும் முன்னிலை பெற்றுள்ளன பஞ்சாப், ஜலந்தர் மேற்கு தொகுதியில் ஆம் ஆத்மி வேட்பாளர் மொஹிந்தர் பகத் வெற்றி பெற்றுள்ளார்

பீகாரில் உள்ள ஒரு தொகுதியில் ஐக்கிய ஜனதா தளமும், மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஒரு தொகுதியில் காங்கிரசும் முன்னிலை தமிழ்நாட்டில் விக்கிரவாண்டி தொகுதியில் மகத்தான வெற்றி பெற்றுள்ளது.

### முதல்வர் மு.க.ஸ்டாலினின் எண்ணற்ற புதுமைத் திட்டங்களால்

# விக்கிரவாண்டி தொகுதியில் தி.மு.க. வரலாற்றுச் சாதனை வெற்றி!

## மக்களின் பேராதரவைப் பெற்றுள்ளார் முதல்வர்!

சென்னை, ஜுலை 15 –

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வரும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம் திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புத் திட்டம் முதலான எண்ணற்ற புதுமையான திட்டங்களால் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வரலாற்றுச் சாதனை வெற்றி !**

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தளபதி திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றது முதல் எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம் திட்டம், புதுமைப்பெண் திட்டம், ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவி, விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புத் திட்டம், அயோத்திதாச குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், முதலான திட்டங்கள் அனைத்துத் தரப்பு மக்களும் பயனடைந்து வருகிறார்கள்.

குறிப்பாக, தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் கொண்டு வந்துள்ள மக்கள் நல திட்டங்களால் ஒவ்வொரு குடும்பத்தி லும் உள்ள தாய்மார்கள், கல்லூரி செல்லும் மாணவர்கள், மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள் உள்ளிட்ட அனைவரும் பயனடைந்து வருகிறார்கள். இத்திட்டங்கள் பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. மேலும், அண்டை மாநிலங்கள் மற்றும் வெளிநாட்டிலும் திராவிட மாடல் அரசின் திட்டங்களை வரவேற்று அங்கும் செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதயில் **முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ்**, விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் 149 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 10,651 மாணவ, மாணவியர் பயன்.

**முதல்வரின் முகவரி திட்டத்தின்கீழ்** 21 ஆயிரத்து 93 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டு பொதுமக்கள் பயனடைந்துள்ளனர்.

**இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின்கீழ்** ஓராயிரத்து 328 மாணவ, மாணவியர் சேர்க்கப்பட்டு 83 பெண் தன்னார்வலர்கள் மூலம் பயனடைகின்றனர்.

**கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின்கீழ்**, 53 ஆயிரத்து 375 குடும்பத் தலைவிகள் மாதந்தோறும் ரூ.1,000 பெறுகின்றனர்.

**மகளிருக்கு கட்டணமில்லா பேருந்துப் பயணத்திட்டத்தின்கீழ்** 3 கோடியே 41 இலட்சத்து 99 ஆயிரத்து 712 முறை மகளிர்,

ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 672 திருநங்கைகள், 4 இலட்சத்து 90 ஆயிரத்து 176 மாற்றுத்திறனாளிகள், ஒரு இலட்சத்து 7 ஆயிரத்து 88 துணையாளர்கள் அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் செய்து பயனடைந்துள்ளனர்.

**நகைக்கடன் தள்ளுபடித் திட்டத்தி ன்கீழ்**, ஓராயிரத்து 633 பயனாளிகளுக்கு ரூ.8.50 கோடி நகைக்கடன் தள்ளுபடி.

**இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டத்தின்கீழ்** 11 இலட்சத்து 55 ஆயிரத்து 400 ரூபாய் செலவில் கட்டணமின்றி விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 190 பேர் சிகிச்சை பெற்று பயனடைந்துளனர்.

**விவசாயிகளுக்கு புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தின்கீழ்** விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் 16 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் 901 பம்ப்செட்களுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டு விவசாயிகள் பயடைந்துள்ளனர்.

**கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டத்தின்கீழ்** 6 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, பல்வேறு நோய்களுக்கான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு, 4,621 பேர் பயனடைந்துள்ளனர்.

முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தியுள்ள மக்கள் நலத் திட்டங்களால், நடைபெற்று முடிந்த விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் அதிமுக போட்டியிட முடியாமல் அஞ்சி ஓலிந்தனர், பா.ம.க மக்களை பிளவுபடுத்தி வாக்குகளை பெற முயன்றது ‘

திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படுத்தியுள்ள சிறப்பான எண்ணற்ற திட்டங்களை முன்னிறுத்தி, மக்களிடம் திட்டங்களையும் பயன்களையும் எடுத்துக் கூறி, மக்களின் பேராதவை பெற்று இது வரை இல்லாத அளவு திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் திரு.அன்னியுர் சிவா பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் அனைத்து மக்களின் வாக்குகளை பெற்று மகத்தான வெற்றி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் அவர்கள் தலைமையிலான இந்தியா கூட்டணியின் கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணிக்கு வாக்களித்து வெற்றி பெற செய்த வாக்காளப் பெருமக்களுக்கு விராலிமலை கிழக்கு ஒன்றியம் குமாரமங்களத்தில் நன்றி தெரிவித்து மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் தலைமையிலும், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஜி. முருகேசன் முன்னிலையிலும் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ஜோதிமணி நன்றி தெரிவித்து உரையாற்றினார்.நிகழ்வில் விராலிமலை ஒன்றிய பெருந்தலைவர் காமு மு.பி.மணி, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மு.பி.மணி, பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம். பழனியப்பன், விராலிமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் மு.பி.ம.சத்தியசீலன், மாவட்ட கவுன்சிலர் சாந்தி தங்க சிங்கம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் விளாப் பட்டி சிவா, பொன்ராம் (2) சங்கர், நேரு, செல்லத்துரை, மண்டையூர் மகேந்திரன், எழில் ராஜா, தமிழினியன் மற்றும் கழகத் தோழர்கள், இந்தியா கூட்டணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சிக்கு சான்றாக, விக்கிரவாண்டி இடைத்தேர்தலில், திராவிட முன்னேற்ற கழக வேட்பாளர் அன்னியூர் சிவா 1,25,712 வாக்குகள் பெற்று அபார வெற்றி பெற்றதை கொண்டாடும் விதத்தில், கரூர் பஸ் ஸ்டாண்ட் அருகில் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பட்டாசுகள் வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்.

### சமூக அநீதிகளை அழித்தொழித்த

# கலைஞர் ஒரு யுக புருஷர்!

## பீட்டர் அல்போன்ஸ் புகழாரம்!



**சென்னை, ஜுலை 14–**

**“தலைவர் கலைஞர் தான் வாழ்ந்த காலத்துச் சீர்கேடுகளையும் மூடப்பழக்கங்களையும், சமூக அநீதிகளையும் அழித்தொழித்த ஒரு யுக புருஷர்” என்று தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத் தலைவர் எஸ்.பீட்டர் அல்போன்ஸ் கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது:–

தலைவர் கலைஞர் தான் வாழ்ந்த காலத்துச் சீர்கேடுகளையும், மூடப்பழக்கங்களையும், சமூக அநீதிகளையும் அழித்தொழித்த ஒரு யுக புருஷர்.

அவரை வாழ்த்தியவர்களும் உண்டு! தூற்றியவர்களும் உண்டு! ஆனால் யாராலும், எக்காலத்திலும் தவிர்க்கப்பட முடியாதவர்.

இந்திய நாட்டின், தமிழகத்தின் இரண்டு நூற்றாண்டு வரலாற்றின் ஒவ்வொரு பெரும் திருப்பத்திலும் அவர் தன் கால் தடம் பதித்தவர். அவரது வார்த்தைகளில் சொன்னால் “தன் மீது எறியப்பட்ட மலத்தையும்,சாணத்தையும், காரி உமிழப்பட்ட எச்சிலையும், இழிந்ததுகள் தன்மேல் கழித்த சிறு நீரையும் தன் காலால் உண்டு, உடலால் செரித்து, உள்ளத்தில் வாங்கி, உணர்வால் ஓங்கி வளர்ந்தவர்.

உயரப்பறக்கும் கழுகின் கழுத்தில் அமரும் கரிச்சான் குஞ்சை, கழுகு என்றுமே காயப்படுத்தியதில்லை. கழுகு பறக்கும் காற்றின் வேகமே அதன் உயிர் குடிக்கும்..

மனநிலை திரிந்த ஞான சூனியங்கள் கலைஞரை இகழ்ந்து இனப்பகைவர்கள் தரும் ஈனப்பிச்சைக்காக விழுந்து கிடக்கின்றன!

கடல் உள்ள வரை, தமிழ் மண் உள்ளவரை கலைஞரின் புகழ் வாழும்!

இவ்வாறு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

**பீட்டர் அல்போன்ஸ்**
தமிழ்நாடு
சிறுபான்மையினர் நல
ஆணையத் தலைவர்





2024 நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றியை வழங்கிய வீரபாண்டி தொகுதிக்கு உட்பட்ட பனமரத்துப்பட்டி ஒன்றிய வாக்காளர் பெருமக்களை சேலம் நாடாளுமன்ற உறுப்பினர், சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி நேரில் சந்தித்து தனது நெஞ்சார்ந்த நன்றினை தெரிவித்தார். உடன் சேலம் கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் பாரப்பட்டி சுரேஷ்குமார், பனமரத்துப்பட்டி ஒன்றிய கழகச் செயலாளர் உமாசங்கர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. அமோக வெற்றி பெற்றதையடுத்து தியாகதுருகம் பேருந்து நிலையம் அருகில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் பொதுமக்கள் மற்றும் தொண்டர்களுக்கு இனிப்புகள் வழங்கினார், உடன் நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன் மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளனர்.